முதுகுத் தண்டில் சக்தி நகரும்போது...



# உடலில் நடக்கும் ரகசியங்கள்!



**கேள்வி:**

"நமது அனுபவத்தின் தன்மையை முதுகுத்தண்டுதான் நிர்ணயம் செய்கிறது என்று நீங்கள் பேசுகிறீர்கள். அதைப் பற்றி சற்று விரிவாகக் கூற முடியுமா?"

**சத்குரு:**

"முதுகுத்தண்டுக்கு உள்பக்கமாக, அதன் இரு பக்கங்களிலும், உடலின் எல்லா நரம்புகளும் கடந்து செல்வதற்கென கால்வாய்க் குழாய் போன்ற இரண்டு துளைகள் உள்ளன. இடது பக்கப் பாதை 'ஈடா' என்றும், வலது பக்கப் பாதை 'பிங்களா' எனவும் அழைக்கப்படுகிறது.

பிராணமயகோசம் அல்லது சக்தி உடலில் 72 ஆயிரம் நாடிகள் உள்ளன. நாடிகள் இந்த உடலமைப்பில், பாதைகள் அல்லது கால்வாய்களாக செயல்படுகின்றன. இருப்பினும் இந்த உடலை வெட்டினால், அவைகளை நீங்கள் பார்க்க முடியாது.

ஆனால், உங்களது விழிப்புணர்வு அதிகரிக்கும்போது, சக்தியின் ஓட்டம் குறித்து உணர்வீர்கள். அப்போது, சக்தியானது இலக்கின்றி தாறுமாறாக அல்லாமல் குறிப்பிட்ட பாதைகளில்தான் நகர்கிறது என்பதை அறிவீர்கள்.

சக்தியானது வெவ்வேறு வழிகளில் நகர்கிறது. இந்த 72 ஆயிரம் வழிகள் அல்லது நாடிகள் 'ஈடா', 'பிங்களா' மற்றும் 'சுஷும்னா' ஆகிய மூன்று அடிப்படை நாடிகளில் இருந்தே கிளை விடுகின்றன.

'ஈடா' மற்றும் 'பிங்களா' ஆகிய இரண்டும் வாழ்வின் இரு பரிமாணங்களான பெண் தன்மை மற்றும் ஆண் தன்மை ஆகியவற்றின் குறியீடாக இருக்கின்றன. இது பாலின வேறுபாடு பற்றியோ அல்லது ஆணாகவோ... பெண்ணாகவோ இருப்பது பற்றியோ அல்ல! மனித இயல்பில் தென்படும் சில குணாதிசயங்களைப் பற்றியது!!

இயற்கையில் சில குணங்கள் ஆண் தன்மை என்றும், சில குணங்கள் பெண் தன்மை எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளன. நீங்கள் ஆணாக இருக்கலாம். ஆனால், உங்களது 'ஈடா' குறிப்பிடும்படியாக இருந்தால், உங்களுக்குள் பெண்தன்மை ஆதிக்கத்தில் இருக்கக்கூடும்.

அதே போல நீங்கள் பெண்ணாக இருக்கலாம். ஆனால், உங்களது 'பிங்களா' குறிப்பிடும்படியாக இருந்தால் உங்களுக்குள் ஆண்தன்மையானது ஆதிக்கத்தில் இருக்கக்கூடும். நீங்கள் தோற்றத்தில் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருப்பது ஒரு பொருட்டல்ல! நாம் ஆண்தன்மை மற்றும் பெண்தன்மை என்று கூறும்போது, ஆண் தன்மையின் குறியீடான 'பிங்களா' காரணரீதியான பரிமாணத்தையும், பெண்தன்மையின் குறியீடான 'ஈடா' மனதின் உள்ளுணர்வு தொடர்பான பரிமாணத்தையும் குறிக்கிறது.

இதை வேறுவிதமாகப் பார்ப்பதென்றால், இந்த இரண்டு அம்சங்களையும் சூரியன் என்றும், சந்திரன் எனவும் குறியீடு செய்யலாம். அதாவது 'பிங்களா' வெளிமுகமாகவும், ஆக்ரோஷமாகவும் ஆண் தன்மையயொத்து இருப்பதால் சூரியன் என்றும்... 'ஈடா' பிரதிபலிப்பதாகவும், உள்வாங்கும் தன்மையுடனும் பெண் தன்மையையொத்து இருப்பதால் சந்திரன் எனவும் குறிக்கப்படுகிறது.

ஆண் தன்மையும், பெண் தன்மையும் வாழ்வின் இரண்டு பாதிகளாக உள்ளன. ஒன்று இல்லாமல் மற்றது நிகழ முடியாது. அனைத்து சக்தியும் இந்த முறையில்தான் செயல்படுகின்றன. மின்சாரம் என்பது நேர்மின்னோட்டம் மற்றும் எதிர்மின்னோட்டம் இரண்டும் இணைந்தது. ஒன்றைவிட மற்றொன்று அதிக முக்கியத்துவமானது என்று எவரும் கூற முடியாது.

வாழ்வின் இந்த இரண்டு அம்சங்களான ஆண்தன்மை மற்றும் பெண் தன்மையானது 'ஈடா' மற்றும் 'பிங்களா' என்ற இரண்டு வழித்தடங்களாகக் குறிக்கப்படுகிறது. இந்தியக் கலாச்சாரத்தில் இரண்டு பாரம்பரியங்கள் வளர்ச்சி அடைந்தன. அவை சூரியன் மற்றும் சந்திரனுடன் தனித் தனியே அடையாளம் கொண்டு வளர்ந்தன. அதன்படி சிலர் சூரிய வம்சத்தினர் என்றும், மற்றும் சிலர் சந்திர வம்சத்தினர் எனவும் குறிக்கப்பட்டனர்.

ஆன்மிக செயல்முறை, சமூக செயல்முறை, அரசியல் செயல்முறை மற்றும் பொருளாதார செயல்முறையை உள்ளடக்கிய ஒட்டுமொத்த அமைப்பும் இந்த இரு பரிமாணங்களை அடித்தளமாகக் கொண்டே வளர்ச்சி பெற்றது. இன்றைக்கும்கூட அது வெளிப்படுகிறது. ஆனால், அப்படிக் குறிப்பிட்டு அடையாளம் காண முடியாமல் இருக்கிறது.

இவைகள் பூமியின் இரண்டு வித பரிமாண்ங்களின் செயல்பாடாக இருக்கின்றன. சிலர் தங்களுக்குள் சந்திரனை மையமாகக் கொண்டு இயங்குகிறார்கள்,



சத்குரு

சிலர் சூரியனை தங்களுக்குள் மையமாகக் கொண்டு இயங்குகிறார்கள். ஆனால், இரண்டுமே பிரச்சினைக்குரியவைதான்! மிகச் சில மனிதர்கள் இரண்டையும் சமமாகப் பயன்படுத்தி இயங்குகிறார்கள்; அவர்கள்தான் இந்தப் பூமியின் தீர்வாக உள்ளனர்.

எப்போதும் நீங்கள் பார்ப்பீர்கள், மிகவும் நல்ல மனிதர்கள் எண்ணற்ற பிரச்சினைகளை உருவாக்கிக்கொண்டே செல்வார்கள். மிகவும் நல்ல பெண்ணும், மிகவும் நல்ல ஆணும் திருமணம் செய்துகொண்டால் எவ்வளவு பிரச்சினைகளை அவர்கள்



உருவாக்குகிறார்கள்! அதன் காரணம் இதுதான்... அவர்கள் இரண்டு வெவ்வேறு பரிமாணங்களில் இருந்து இயங்கிக்கொண்டு, அதே நேரத்தில் ஒரு புள்ளியில் சந்திக்க முயற்சிக்கின்றனர். அப்படி நடக்காது.

ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளிக்கொண்டே ஓடுவது போலத்தான் அது இருக்குமே தவிர இணைந்து செல்வதாக இருக்காது. முடிவற்ற சச்சரவும், உரசலும்தான் அங்கே நிகழும். எத்தனை

தடவை அவர்கள் உட்கார்ந்து அதை அலசி ஆராய முற்பட்டிருப்பார்கள்?

'நமக்குள் ஏன் உறவுமுறை இப்படி இருக்கிறது? நமக்குள் என்னதான் பிரச்சினை? எந்தப் பிரச்சினையும் இல்லையே! நாம் இருவருமே நல்லவர்கள், மகத்தானவர்கள்தான். பிறகு ஏன் நமக்குள் பிரச்சினை எழுகிறது?'– இவ்வளவு கேள்விகள் மிஞ்சினாலும் அங்கே தர்க்கரீதியான காரணம் எதையுமே காண முடியவில்லை. ஆனாலும் பிரச்சினை இருக்கிறது.

ஒரு கணவனும், மனைவியும் இதற்கான தேர்ந்த உதாரணம் என்றாலும், இத்தகைய பிரச்சினையானது தம்பதியருக்கு இடையில் மட்டும் நிகழ்ந்துகொண்டிருக்கவில்லை. எல்லா இடங்களிலும், அனைவருக்கும் இடையிலும் வெவ்வேறு பிரச்சினைகள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

இரண்டு அம்சங்களையும் சமமாகக் கையாள்பவர்கள்... அதாவது, தங்களுக்குள் உள்ள சூரியன் மற்றும் சந்திரனின் தன்மைகளை இணையான அளவில் கையாள்பவர்கள் மட்டுமே தீர்வுக்கான வழியாக இருப்பார்கள். மற்றவர்கள் அனைவரும் பிரச்சினைகளைத்தான் உண்டாக்கிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஒன்றும் தவறானவர்கள் இல்லை. மிகவும் நல்லவர்கள்தான்.

ஆனால் அவர்கள் பிரச்சினைக்குரியவர்கள்.



இரண்டு தீயவர்கள்தான் சண்டைப் போட்டுக்கொள்வதாக நினைத்துவிடாதீர்கள். இங்கேஎப்போதும்இரண்டு நல்ல மனிதர்கள்தான் சண்டையிட்டுக் கொள்கின்றனர். எந்த அளவுக்கு அதிகமாக அவர்கள் தங்களை நல்லவர்களாக நினைக்கிறார்களோ... அந்த அளவுக்கு சச்சரவு செய்கிறார்கள் இல்லையா?

பெரும்பாலும் மனிதர்கள் 'ஈடா' மற்றும் 'பிங்களா'விலேயே வாழ்ந்து முடிந்துவிடுகின்றனர். 'சுஷும்னா' என்கிற மையப் பகுதியானது மனித உடற்கூறில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சம். சக்திகள் அதற்குள் நகரும்போதுதான் உண்மையில் வாழ்க்கை தொடங்குகிறது. ஆனால், பெரும்பான்மையோருக்கு அது




'சுஷும்னா'வுக்குள் அசைவற்ற நிலையிலேயே இருக்கிறது.

அடிப்படையில் அது எந்தத் தன்மையும் அற்றது. ஆம்... அதற்கே உரித்தான குணாதிசயம் எதுவும் இல்லை. அது வெற்றுவெளி போன்றது. ஒரு வெற்றிடம் இருந்தால்... நீங்கள் விரும்பும் எதையும் உங்களால் உருவாக்க முடியும். உங்கள் சக்தி நிலைகள் 'சுஷும்னா'வுக்குள் நகர்ந்துவிட்டால், நீங்கள் 'வைராக்யா' நிலையை எட்டிவிட்டீர்கள் என்கிறோம். 'ராகா' என்றால் நிறம் என்று பொருள். 'வைராக்யா' என்றால் நிறமற்றது. நீங்கள் கண்ணாடி போலாகிவிட்டீர்கள்.

அப்படி ஒளி ஊடுருவக்கூடிய கண்ணாடியாகிவிட்டால், உங்களுக்குப் பின்னால் சிவப்பு நிறம் இருந்தால்...நீங்களும் சிவப்பாக மாறுகிறீர்கள். உங்களுக்குப் பின்னால் இருப்பது நீலம் என்றால், நீங்களும் நீலமாகிவிடுகிறீர்கள். நீங்கள் பாரபட்சமற்றவர். எங்கிருந்தாலும் அதன் ஒரு பாகமாகவே மாறி விடுகிறீர்கள். ஆனாலும் எதுவும் உங்களிடம் தேங்கி இருக்காது.

நீங்கள் சிவப்பு மனிதர்களுடன் இருந்தால், முழுமையான சிவப்பானவர் ஆக முடியும். ஏனென்றால் ஊடுருவத்தக்க கண்ணாடியாக இருக்கிறீர்கள். ஆனால் சிவப்புத்தன்மை, உங்கள் மீது ஒரு கணம்கூட தொடர்ந்து படிந்திருக்காது.

அவ்வாறு 'வைராக்யா' நிலையில் இருந்தால் மட்டுமே வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களையும் காண்பதற்கான தைரியம் கொள்வீர்கள். இது எப்படியென்றால்...

ஏதாவது ஒரு நிறம் உங்களுடன் மாறாமல் ஒட்டிவிட்டால்... அதாவது சிவப்பு நிறம் உங்களுடன் தங்கிவிட்டால்... பச்சை நிறத்துக்குள் செல்வதற்கு எதிரானவர் ஆகிவிடுவீர்கள். பச்சை நிறம் உங்களோடு ஒட்டிக்கொண்டால்... நீல வண்ணத்துக்குள் செல்ல எதிர்ப்பு தெரிவிப்பீர்கள்.

ஆகவே, வாழ்வின் ஏதோ ஓர் அம்சம் உங்களுடன் நிலைத்தால், நீங்கள் அடுத்த ஒன்றை எதிர்ப்பீர்கள். ஏனென்றால், 'இது சரி... அது தவறு. இது சரியானது... அது சரியானதல்ல' என்கிற பாரபட்சமான போக்கை நீங்களே வளர்த்துக்கொள்வீர்கள். இது வாழ்வின் நீரோட்டத்தைக் கட்டுப்படுத்திவிடுகிறது.



எல்லாவற்றுக்கும் மேல், சக்தி நிலைகள் சுஷும்னா'வுக்குள் நகர்ந்துவிட்டால், புது விதமான சமநிலையை அடைகிறீர்கள். இந்தக் கணத்தில் நீங்கள் ஏதோ ஒரு சமநிலையில் இருக்கலாம். ஆனால், ஏதோ காரணத்தால் வெளிச்சூழல் கட்டுக்கு அடங்காமல் போனால், நீங்களும் கட்டுக்கு அடங்காமல் அதற்கு எதிர்ச்செயல் செய்வீர்கள்.

ஏனென்றால், எதிர்ச்செயல் செய்வது என்பது 'ஈடா' மற்றும் 'பிங்களா'வின் இயல்பாக இருக்கிறது. ஆனால், சக்தி நிலைகள் 'சுஷும்னா'வுக்குள் ஒரு முறை நகர்ந்துவிட்டால், உள்நிலையில் சமநிலையை அடைகிறீர்கள். அங்கு குறிப்பிட்ட வெற்றிடம் உள்ளது. அதற்கு ஒருபோதும் இடையூறு செய்ய முடியாது. இது எப்போதும் எந்தவிதமான குழப்பத்துக்கும் உள்ளாகாது; வெளிச்சூழல்களால் தொடப்படவே முடியாத வெற்றுவெளி அது.

உங்களுக்குள் நீங்கள் இந்த ஸ்திரமான சூழலை உருவாக்கினால்தான் விழிப்புணர்வின் உச்சங்களை உணரக்கூடிய துணிவும், தகுதியும் பெறுவீர்கள். வாழ்வின் மற்ற பரிமாணங்களை நமக்குள் உணர வேண்டுமென்றால், 'துன்பம் நேருமோ?' என்ற பயம் விலக வேண்டும். அதற்கான ஸ்திரத்தன்மையை உள்நிலையில் நாம் உருவாக்க வேண்டியது மிகவும் முக்கியமானது. அப்படி நீங்கள் உருவாக்கினால்தான் வாழ்வின் வெவ்வேறு பரிமாணங்களை எட்டுவதற்கான துணிவு கொள்வீர்கள்!